# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 191/2015

ஆணை எண்: 235/2017

நாள்: 19/09/2017

**திரு. K. சுந்தர்,**
**15–B, ஆற்றங்கரைத் தெரு,**
**கீழ்புவனகிரி,**
**கடலூர் மாவட்டம்.** - **முறையீட்டு மனுதாரர்**

**திருமதி. வள்ளி சச்சுதானந்தம்,**
**முன்னாள் மன்றத் தலைவர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** - **எதிர் மனுதாரர்**

## ஆணை

கடலூர் மாவட்டம், 15–B, ஆற்றங்கரைத் தெரு, கீழ்புவனகிரியில் வசிக்கும் திரு. K. சுந்தர் என்பவரின் 29.08.2015 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 31.08.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் 31.08.2015 அன்று பெறப்பட்டு 191/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

கடலூர் மாவட்டம், 15–B, ஆற்றங்கரைத்தெரு, கீழ்புவனகிரியில் வசிக்கும் திரு. K. சுந்தர் என்பவர் தமது 29.08.2015 நாளிட்ட முறையீட்டு மனுவினை 2015–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படும் முறைகள்) விதிகளின்படி உரிய படிவத்திலும், ஆதார ஆவண நகல்களுடன் மற்றும் ரூ.10/– மதிப்பிலான நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்யவில்லை. எனவே, முறையீட்டு மனுதாரின்

இம்முறையீட்டு மனு குறைபாடான மனு என தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இருப்பினும், மனுதாரரது புகார் குறித்து செயல் அலுவலரிடமிருந்து வரப்பெற்ற 19.10.2015 நாளிட்ட அறிக்கையின் நகல் மனுதாரருக்கு இத்துடன் அனுப்பப்படுகின்றது. விதிகளின்படி உரிய படிவத்தில் நீதிமன்ற வில்லையுடன் இன்றைய நிலையில் குறிப்பான புகார் / ஆட்சேபனை ஏதும் இருப்பின் முறையாக முறையீட்டு மனுவினை தாக்கல் செய்து கொள்ளலாமென மனுதாரருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 23/9/17

23-9-17

23/9/17

பெறுநர்:

1) திரு. K. சுந்தர்,
15-B, ஆற்றங்கரைத்தெரு,
கீழ்புவனகிரி, புவனகிரி வட்டம்,
கடலூர் மாவட்டம். (அறிக்கையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

2) செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.